IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 63 /2010
Deposition of witness for PW3

Name : ஜெயவேலு
Father Name : அக்காரி

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21 day of September, 2022.

குறுக்கு விசாரணை

1. என் அப்பா அக்காரி ரெட்டியின் மூத்த சகோதரர் கந்தசாமி ரெட்டி மற்றும் இளைய சகோதரர் இவ்வழக்கின் வாதி பேகி சுப்பிரமணிரெட்டி என்றால் சரிதான். நான் ஆசிரியராக இராணிப்பேட்டை மாவட்டம், சையனபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பணிபுரிகிறேன். 1991-லிருந்து ஆசிரியராக உள்ளேன். சித்தூரில் உள்ள வெவ்வேறு பள்ளிகளில் 1991 முதல் அரசு வேலை 2005ம் ஆண்டு கிடைக்கும் வரை ஆசிரியராக வேலைசெய்துள்ளேன். தெங்கால் கிராமத்திலிருந்து வேலைக்கு சென்றுவருவேன் என்றால் சரிதான்.

2. வாதி சுப்பிரமணி ரெட்டிக்கு இரண்டு ஆண்பிள்ளைகள் முத்தப்பன், கிருஷ்ணன் மற்றும் 4 பெண்பிள்ளைகள். மேற்படி முத்தப்பன் கலப்பு திருமணம் எந்த வருடம், யாருடன், எங்கு அவருக்கு திருமணம் நடந்தது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி வாதி சுப்பிரமணிரெட்டியின் மூத்த மகன் முத்தப்பன், இளைய மகன் கிருஷ்ணன் என்றால் சரிதான். மேற்படி முத்தப்பன் சாலை விபத்தில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் இறக்கும் வரையில் வாதி குடும்பத்தினருடனும், எங்கள் குடும்பத்தினருடன் தொடர்பில் இல்லை என்றால் சரிதான். எந்த வருடம் இறந்தார் என்று எனக்கு தெரியாது. பெங்களூரில் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

3. மேற்படி வாதி சுப்பிரமணிரெட்டியின் இளைய மகன் கிருஷ்ணன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி முத்தப்பன் இறப்பதற்கு தோராயமாக 3 வருடங்களுக்கு முன்பே கிருஷ்ணன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். கிருஷ்ணன் என்பவருக்கு திருமணமாகி அவருக்கு மனைவி மற்றும் குழந்தைகள் உள்ளனர் என்றால் சரிதான். வாதி பேகி சுப்பிரமணிக்கு மனைவி மற்றும் குழந்தைகள் உள்ளனர் என்றால் சரிதான்.

4. 20.3.1981-ல் எனது தந்தைக்கும் அவரது உடன் பிறந்த மேற்படி கந்தசாமிரெட்டி மற்றும் வாதி சுப்பிரமணிரெட்டி ஆகியோருக்குமிடையே பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் சரிதான். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திர எண்.989/ 1981-ன் சார்பதிவக சான்றிட்ட நகல் தான் மேற்படி பாகப்பிரிவினை என்றால் சரிதான் (20.3.1981 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திர எண்.989/1981 சார்பதிவக சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ1 ஆகும்).

5. மேற்படி பி.வா.சா.ஆ1-ல் 15.1.1967-ல் வாய்மொழியாக பாகப்பிரிவினை ஏற்பட்டதாகவும், அதனை உறுதி படுத்த வேண்டு மேற்படி பி.வா.சா.ஆ1 ஏற்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால' சரிதான். வசம் மேற்படி பி.வா.சா.ஆ1-ல் என் தந்தையின் மூத்த சகோதரர் கந்தசாமியின் வசம் மேற்படி பி.வா.சா.ஆ1-ன் அசல் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ1-ன் அசலை நான் ஏற்கனவே பார்த்துள்ளேன் என்றால் சரிதான்.

6. மேற்படி பாகப்பிரிவினையின்படி ஏ அட்டவணை சொத்து மேற்படி கந்தசாமிக்கும், பி அட்டவணை சொத்து என் தந்தைக்கும், சி அட்டவணை சொத்து வாதிக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால' சரிதான். என் தந்தைக்கு நான் மட்டுமே ஆண்வாரிசு என்றால் சரிதான். என் தந்தை தற்பொழுது உயிருடன் இல்லை. 1997-ல் இறந்துவிட்டார் தேதி ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ1-ல் பி அட்டவணை சொத்தானது என் தந்தைக்கு கிடைக்கப்பெற்று அவர் இறந்த பின்பு எனக்கு வந்தது என்றால் சரிதான்.

7. 2005-க்கு முன்பு மேற்படி பி.வா.சா.ஆ1-ல் பி அட்டவணை சொத்தில் கண்ட சொத்துக்கள் மட்டுமே எனக்கு இருந்தது. அரசு வேலைக்கு சேர்ந்த பின்பு நான் தனிப்பட்ட சொத்துக்களை வாங்கினேன். சாட்சி தற்பொழுது மாற்றி 1997-க்கு பிறகு சிறிது சிறிதாக தனிப்பட்ட சொத்துக்களை வாங்கினேன் என்று தன்னிச்சையாக கூறுகிறார். 1997.க்கு பிறகு நான் வாங்கிய சொத்துக்கள் அனைத்தும் கிரையப்பத்திரத்தின் அடிப்படையில் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான்.

8. 1997-க்கு முன்பு பி.வா.சா.ஆ1-ல் கண்ட சொத்துக்கள் மட்டுந்தான் என்னுடைய சொத்து என்றால் சரிதான். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திர எண்.4682/1998-ன் சார்பதிவக சான்றிட்ட நகலில் கண்டுள்ள சொத்தை நான் வாதி சுப்பிரமணிரெட்டிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான் (26.11.1998 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திர எண்.4682/1998 சார்பதிவக சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ2 ஆகும்).

9. பி.வா.சா.ஆ2 என் தந்தை இறந்த மறுவருடமே நான் ஏற்படுத்திக்கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ1-ன் படி என் தந்தை பி அட்டவணை சொத்தை அடைந்து அவர் இறந்த பின்பு எனக்கு வரப்பெற்ற அந்த சொத்தைதான் பி.வா.சா.ஆ2-ன் படி விற்பதாக மேற்படி பி.வா.சா.ஆ2-ல் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சாட்சி ஆவணத்தை பரிசீலித்து விட்டு அவ்வாறு குறிப்பிடவில்லை என்று கூறுகிறார். பி.வா.சா.ஆ1 பாகப்பிரிவினைபடி சர்வே எண். 131/2-ல் 1 ஏக்கர் 46 செண்டில் 50 செண்ட் குறிப்பிட்ட சக்குபந்தியுடன் என்தந்தையின் மூத்த சகோதரர் கந்தசாமிரெட்டிக்கு ஏ அட்டவணைசொத்தாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

10. மேற்படி பி.வா.சா.ஆ1-ன் படி அதே சர்வே எண்ணில் ஏ அட்டவணை சொத்திற்கு கிழக்கிலும், வாதிக்கு கிடைக்கப்பெற்ற சி அட்டவணை சொத்திற்கு மேற்கிலும், ரோட்டிற்க்கு வடக்கிலும், ஆறுமுகவகையறாபாகத்திற்கு தெற்கிலும் என்ற குறிப்பிட்ட சக்குபந்தியுடன் அதன் மத்தியில் 48 செண்ட் என்தந்தை அக்காரி ரெட்டிக்கு பி அட்டவணை சொத்தாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ1-ன் படி அதே சர்வே எண்ணில் வாதிக்கு சி அட்டவணை சொத்தின் நாற்புற எல்லைகள் மேற்கில் எனது தந்தைக்கு ஒதுக்கப்பட்ட பி அட்டவணை சொத்து, கிழக்கில் ஆற்றுகால்வாய், தெற்கில் ரோடு, வடக்கில் ஆற்றுக்கால்வாய் இதன் மத்தியில் உள்ள 48 செண்ட் நிலமும் அதே சர்வே எண்ணில் உள்ள கால்வாயும் வாதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

11. என் தந்தைக்கு ஒதுக்கப்பட்ட பாகம் பி அட்டவணை சொத்துக்களின் சர்வே எண்.130/2 என்று பி.வா.சா.ஆ1-ல் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சாட்சி பி.வா.சா.ஆ1-ஐ நன்கு

பார்த்துவிட்டு இல்லை என்று கூறுகிறார். என் தந்தையும், இவ்வழக்கின் வாதியும் கடந்த 30.4.1990 சொத்தை பொருத்து பரிவர்த்தனை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டனர் என்றால் சரிதான். அது தான் தற்பொழுது என்னிடம் காட்டப்படும் பதிவு செய்யப்பட்ட பரிவர்த்தனை பத்திர எண்.1406/1990-ன் சார்பதிவக சான்றிட்ட நகல் என்றால் சரிதான் (30.4.1990 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட பரிவர்த்தனை பத்திர எண்.1406/1990 சார்பதிவக சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ3 ஆகும்).

12. மேற்படி பி.வா.சா.ஆ3-ல், பி.வா.சா.ஆ1-ல் கண்ட சொத்துக்களை விவசாய சௌகரியத்திற்காக வாதியும் என் தந்தையும் பரிவர்த்தனை செய்துகொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ3-ல் என் தந்தைக்கு வந்த சொத்துக்கள் ஏ அட்டவணை சொத்தாகவும், வாதிக்கு வந்த சொத்துக்கள் பி அட்டவணை சொத்தாகவும் பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு பிரிக்கப்பட்ட என்தந்தையின் ஏ அட்டவணை சொத்தை வாதிக்கும், அதேபோல வாதியின் பி அட்டவணை சொத்தை என் தந்தையும் மேற்படி பி.வா.சா.ஆ3-ன் மூலம் பரிவர்த்தனை செய்து கொள்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

13. பி.வா.சா.ஆ1-ல் பி அட்டவணை சொத்தில் சர்வே எண். 131/2-ல் குறிப்பிட்டுள்ள அளவும், சக்குபந்தியும் பரிவர்த்தனை பத்திரமான பி.வா.சா.ஆ3-ல் ஏ அட்டவணை சொத்தின் சர்வே எண்.130/2-ல் குறிப்பிட்டுள்ள அளவும், சக்குபந்தியும் ஒன்று தான் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ1ன் படி என்தந்தைக்கு சர்வே எண். 130/2-ல் எந்த சொத்துக்களும் ஒதுக்கப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ1-ல் சர்வே எண். 131/2 என்பதை தான் பி.வா.சா.ஆ3-ல் சர்வே எண்.130/2 என்று தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது.

14. மேற்படி பரிவர்த்தனை பத்திரம் குறித்தும், சர்வே எண்கள் குறித்தும் விவரங்கள் எனக்கு நன்கு தெரிந்தே வாதி சுப்பிரமணியத்திற்கு ஆதரவாக என்னுடைய முதல் விசாரணை சாட்சிய பிரமாணவாக்குமூலத்தில் குறிப்பிடாமல் மறைத்து விட்டேன் என்றால் சரியல்ல. தற்பொழுது

என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ2-ல் ஷெடியூலில் கண்ட சொத்தானது எனது பெயரில் 150249 தனிப்பட்டா எண்.13-ஆக பட்டா வந்து என்னுடைய சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும் எனது குடும்ப செலவிற்காக விற்பனை செய்ததாக கண்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ2-ல் நான் விற்பனை செய்த சொத்தின் விஸ்தீரணம் 43 செண்ட் என்றால் சரிதான். மேற்படி விஸ்தீரணத்தின் சர்வே எண்.131/2ஏ என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

15. நான் பி.வா.சா.ஆ2-ல் விற்பனை செய்த சொத்தின் சக்குபந்தி வடக்கில் ஆறுமுகரெட்டியார், தெற்கில் பொதுவழி, மேற்கில் பி.வா.சா.ஆ1-ன் படி என் தந்தையின் மூத்த சகோதரர் கந்தசாமயின் வகையறாவிடமிருந்து வையாபுரி என்பவர் கிரையம் பெற்ற சொத்து, கிழக்கில் வாதி சுப்பிரமணியத்தின் நிலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பி.வா.சா.ஆ2-ல் நான் குறிப்பிட்டுள்ள சக்குபந்தியும், பி.வா.சா.ஆ1-ல் பி அட்டவணை சொத்தில் சர்வே எண்ணில் கண்ட சக்குபந்தியும், பி.வா.சா.ஆ3- பரிவர்த்தனை பத்திரத்தில் என்தந்தையின் ஏ அட்டவணை சொத்தான சக்குபந்தியும் ஒன்று தான் என்றால் சரிதான்.

16. வழக்கின் பிரதிவாதியை எனக்கு தெரியும் எனது உறவினர், என் ஊர்க்காரர். வழக்கு சொத்து உள்ள பாலேகுப்பம் கிராமத்தில் தான் பிரதிவாதியின் பெற்றோர்கள் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். முத்தப்பன் பிரதிவாதிக்கு விற்பனை செய்த சொத்து குறித்து என்னுடைய முதல் விசாரணை பிரமாணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த விற்பனை பத்திரத்தை இதற்கு முன்பு நான் பார்க்கவில்லை. தற்பொழுது என்னிடம் காட்டப்படும் 29.9.1995- தேதியிட்ட கிரையப்பத்திர முன்னிலைக்கு தான் முத்தப்பன் தாவா சொத்துக்களை பிரதிவாதிக்கு கிரையம் செய்துகொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

17. பி.வா.சா.ஆ2-மேற்படி முத்தப்பன் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் தேதிக்கு பின்னிட்டது என்றால் சரிதான். முத்தப்பன் வழக்கு சொத்தை பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த பின்பு பிரதிவாதி அதனை அடைந்து சுவாதீனத்தில் இருந்து விவசாயம் செய்து வருகிறார் என்றால் இல்லை. தற்பொழுது என்னிடம் காட்டப்படும் பட்டா பாஸ்புத்தகத்தில தாவா

சொத்துக்கள் பிரதிவாதியின் பெயரில் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது சரிதான். பி.வா.சா.ஆ3 பரிவர்த்தனை பத்திரத்திற்கு பின்னிட்டு வாதி சுப்பிரமணிரெட்டிக்கு பி.வா.சா.ஆ1ன் மூலம் சி அட்டவணை சொத்தாக சர்வே எண்.131/2-ல் 48 செண்டும், பர்வர்த்தனை பத்திரத்தின் மூலம் என் தந்தை அக்காரிரெட்டிக்கு அதே சர்வே எண்ணில் ஒதுக்கப்பட்ட 48 செண்டும் சேர்த்து மொத்தமாக வாதிக்கு பி.வா.சா.ஆ3, சர்வே எண்.131/2-ல் 96 செண்ட் கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான்.

18. மேற்படி முத்தப்பன் இறக்கும் வரையில் என்ன வேலை செய்தார் என்றும், எங்கு வசித்தார் என்றும், ஒரு மனைவி மற்றும் பிள்ளைகளின் பெயர்கள் ஆகியவை எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். வாதி சுப்பிரமணி கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக குடும்பத்தினருடன் பெங்களூரில் வசித்து வந்தார் என்றால் இல்லை. ஒரு சில மாதங்கள் பெங்களூரில் அவருடைய மனைவியுடனும், இராணிப்பேட்டையில் அவரது மகளுடனும், சில தினங்கள் எங்களுடனும் வசித்து வந்தார். வழக்கு சொத்து இருக்கும் பாலே கிராமத்தில் மேற்படி வாதி வசிக்கவில்லை என்றால் வசித்தார்.

19. இராணிப்பேட்டையிலும், பெங்களூரிலும், பாலேகுப்பம் மற்றும் தெங்கால் கிராமத்தில் வாதிக்கு சொந்தமாக இருக்கும் வீட்டில் வசிப்பாரா என்றால் இல்லை. பாலேகுப்பத்தில் வாதிக்கு சொந்தமாக வீடு உள்ளது. அதை அவருடைய மகளுக்கு கொடுத்தவிட்டதாக கேள்விப்பட்டேன். நான் என்னுடைய முதல்விசாரணை பிரமாணவாக்குமூலத்தில் பி.வா.சா.ஆ1-ன் படி வாதிக்கு 48 செண்ட் சி அட்டவணை சொத்தும் நான் வாதிக்கு 1998-ல் ஏற்படுத்திக்கொடுத்த பி.வா.சா.ஆ 2-ன் படி வாதிக்கு 48 செண்டும் ஆக 96 செண்ட் வாதிக்கு 1998ம் ஆண்டுதான் கிடைக்கப்பெற்றது என்றும், ஆனால் அதற்கு முன்பே 20.9.1995ம் அன்று வாதியின் மகன் முத்தப்பன் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்கள் குறித்து ஏற்படுத்திக்கொடுத்த கிரையம் செல்லாது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

20. என்னுடைய முதல்விசாரணையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ள சங்கதிகள் தவறு என்றும், என் தந்தை பி.வா.சா.ஆ3 முன்னிலைக்கு ஏற்கனவே வாதிக்கு பரிவர்த்தனை மூலம்

கொடுத்த அதே சொத்தை பி.வா.சா.ஆ2 முன்னிலைக்கு என் தந்தைக்கு பி.வா.சா.ஆ1ன் படி கிடைக்கப்பெற்ற பி அட்டவணை சொத்து என்ற விவரத்தை மறைத்து முத்தப்பன் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த வழக்கு சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் வாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க பி.வா.சா.ஆ2-ஐ வாதிக்கு சாதகமாக பொய்யாக தயாரித்துள்ளோம் என்றால் சரியல்ல.

21. பி.வா.சா.ஆ2-ல் சாட்சிகளாக கந்தசாமிரெட்டி மகன் முத்தப்பனும், ஆறுமுகரெட்டியின் மகன் ஏகாம்பரமும், இவ்வழக்கின் வாதியின் மகன் முத்தப்பனும் கையொப்பமிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு கிடைக்கப்பெற்ற வழக்கு சொத்தை அபகரிக்கவேண்டி வாதியும், வாதியின் மகன் முத்தப்பனும், நானும் சேர்ந்து தவறான சங்கதிகளுடன் பி.வா.சா.ஆ 2-ஐ தயாரித்துள்ளோம் என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணை பிரமாணவாக்குமூலத்தில் முத்தப்பனை நான் பார்த்ததே கிடையாது என்று பொய் சொல்லியுள்ளேன் என்பதால் என்னுடைய முதல்விசாரணை சாட்சியத்தை நிராகரிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

22. பி.வா.சா.ஆ1 முன்னிலைக்கும், பி.வா.சா.ஆ3 முன்னிலைக்கும் வாதி சுப்பிரமணி வகையாறாக்களுக்கு சர்வே எண். 131/2-ல் 96 செண்ட் கிடைக்கப்பெற்றது என்றும், மேற்படி 96 செண்ட் நிலம் முத்தப்பனுக்கும், அவரது தம்பிக்கும் அவர்களது குடும்பத்தில் ஏற்பட்ட வாய்மொழி பாகத்தின் அடிப்படையில் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அந்த சொத்துக்களை தான் பிரதிவாதிக்கு முத்தப்பன் விற்றுள்ளார் என்றும், அதை மறுத்து பி.வா.சா.ஆ2-க்கு பின்னர் தான் சர்வே எண்.131/2-ல் வாதி வகையறாவிற்கு 96 செண்ட் கிடைக்கப்பெற்றது என்றும், அதனடிப்படையில் பிரதிவாதியின் பெயரில் உள்ள கிரையப்பத்திரம் செல்லாது என்று நான் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல.

23. வழக்கு சொத்தை முத்தப்பனிடமிருந்து பிரதிவாதி 20.9.1995-அன்று கிரையம் பெற்ற பின்பு பி.வா.சா.ஆ2 மற்றும் பி.வா.சா.ஆ3 ஏற்படுத்தப்பட்டுள்ளதால் அதற்கு எந்த சட்ட வலிமையும் கிடையாது என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணை பிரமாண

வாக்குமூலத்தில் பத்தி 6-ல் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். மேற்படி முத்தப்பனும், கிருஷ்ணனும் இறப்பதற்கு முன்பு பிரதிவாதி அவரிடமிருந்து நான் கூறுவதுபோல் ஏமாற்றி வழக்கு சொத்தை கிரையம் பெற்றுவிட்டதாக பிரதிவாதி மீது ஏதாவது சட்டநடவடிக்கை எடுத்தார்களா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது.

24. என்னுடைய முதல் விசாரதணை வாக்குமூலத்தில் பத்தி 8-ல் கூறியுள்ள சங்கதிகள் தவறு என்றும், வாதிக்கு பி.வா.சா.ஆ1ன் படி கிடைக்கப்பெற்ற பாகசொத்துக்கள் என்றும், அவரின் சுயசம்பாத்திய சொத்துக்கள் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ2ன் படி நான் வாதிக்கு சர்வே எண். 131/2ஏ ஆனது வாதியின் சுயசம்பாத்திய சொத்து. பி.வா.சா.ஆ2 சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் இல்லைஎன்றும், அதன் மூலம் வாதிக்கு எந்த உரிமை மூலமும் இல்லை என்றால் சரியல்ல.

25. வாதியின் குடும்ப விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்று என்னுடைய முதல்விசாரணை பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் தவறு என்றால் சரியல்ல. வாதியுடன் நான் வசிக்கவில்லை என்பதால் அவருடைய குடும்ப விவரங்கள் குறித்து எனக்கு நேரிடையாக தெரியாது என்றும், வாதி கூறியதின் அடிப்படையில் தான் நான் கூறுகிறேன் என்றால் சரிதான். வாதிக்கு ஆதரவாக வாதி குடும்பத்தினருக்குள் பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்று என்னுடைய முதல் விசாரணைசாட்சியத்தில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

26. வாதிக்கு ஆதரவாக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், என்னுடைய முதல்விசாரணை பிரமாணவாக்குமூல சாட்சியத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என்றும், என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்கும், குறுக்கு விசாரணை சாட்சியத்திற்கும் முரண்பாடு உள்ளதால் என்னுடைய சாட்சியத்தை நிராகரிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

K VENKATESAN Digitally signed by K VENKATESAN

DISTRICT MUNSIF

KATPADI.